**செய்தி வெளியீடு எண் : 119** **நாள்: 17.01.2022**

**வடகிழக்குப் பருவமழையின் காரணமாக சென்னை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட சேதாரங்களுக்கான நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நிதி வழங்கிட வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.1.2022) கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:–**

2021 வடகிழக்கு பருவமழையின்போது தமிழ்நாட்டில் வரலாறு காணாத மழை பெய்து சென்னை மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் வெள்ளத்தை ஏற்படுத்தியதை ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு எழுதியுள்ள தனது கடிதத்தில் நினைவூட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை நிறைவேற்ற ஒன்றிய அரசிடமிருந்து ரூ.6230.45 கோடி நிதி உதவி கோரி தனது அரசால் மூன்று முறை கோரிக்கை மனுக்களை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும்; கோவிட்–19 பெருந்தொற்றின் மூன்றாவது அலை ஏற்கனவே பரவியுள்ள சூழலில், தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை மாநில அரசு முழுமையாக முடுக்கிவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இதற்கான பெரும் நிதித் தேவை மாநில நிதிநிலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடிய அதே வேளையில், கொரோனா கட்டுப்படுத்துதலுக்காக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு விதிமுறைகள், ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துயரத்தை மேலும் கூட்டுவதாக அமைந்திருப்பதையுத் சுட்டிக் காட்டியுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கும் மாநில நிதியிலிருந்து இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "எனவே, வெள்ளச் சேதங்களுக்கான சீரமைப்புப் பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி விடுவிக்கப்பட்டால் அது மாநில மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்" என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு விரைந்து நிதியுதவி அளிப்பதற்குத் தாங்கள் உதவிட

வேண்டும் என்றும் மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று (17.01.2022) புதுடெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுத் தலைவர் திரு.டி.ஆர். பாலு அவர்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்களை நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கடிதத்தை வழங்கினார்.

**P.R.No: 119** **Date: 17.01.2022**

**Text of the D.O.Letter No.425/CMO/2022, Dated 16-01-2022 of Thiru. M.K.Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Union Home Minister, Government of India, requesting to release the NDRF assistance for the flood damages urgently.**

Hon'ble Union Home Minister,

Vanakkam,

You may kindly recall that Tamil Nadu witnessed unprecedented rainfall during the Northeast Monsoon 2021 causing floods in Chennai and other parts of the State. My Government has submitted three memoranda seeking financial assistance of Rs.6230.45 crores from Government of India towards relief and restoration.

The third wave of Covid-19 has already arrived and the State Government has fully geared up its efforts to fight the pandemic. While the resource commitment required for this is daunting and is causing severe stress on the State Finances, lockdown conditions associated with Covid management also adds to distress among the people who have only recently suffered in the aftermath of floods. The state government has disbursed compensation to the victims of the flood and farmers whose crops have been affected in the floods from the state funds. It will be of immense help to the people of the State if the NDRF assistance for the flood damages is released urgently.

I therefore request your intervention in getting the assistance to Tamil Nadu sanctioned early.

*****

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**